643/2021 (14) அ-1/2022

**இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ப.மு.எண். 9329 /அ1/2021 நாள்– 03 .01.2022**

---

பொருள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – இராமநாதபுரம் மாவட்டம் மஞ்சூர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி.இரா.சுமதி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை –
1) அரசாணை (நிலை) எண்.101 பள்ளிக் கல்வி (வரவு–செலவு–1) துறை நாள்–18.05.2018.
2) பரமக்குடி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 913 /அ1/2013, நாள். 25.03.2013
3) பரமக்குடி மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண். 807/அ1/2016, நாள். 21.07.2016
4) இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் மூ.மு.எண். 2611 /அ1/2020, நாள்.10.09.2020
5) மஞ்சூர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் முதல்வரின் கடித ந.க.எண். 643 / 2021 நாள்– 01.12.2021.

===============

பார்வை 04 இல் காணும் செயல்முறைகளின்படி இராமநாதபுரம் மாவட்டம், மஞ்சூர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 11.09.2020 முற்பகல் முதல் பதவி உயர்வின் மூலம் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்துவரும் திருமதி. இரா.சுமதி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 11.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரும் கருத்துருவினை பார்வை(5)ல் காணும் கடிதம் வாயிலாக சம்பந்தப்பட்ட அலுவலர் பரிந்துரை செய்து இவ்வலுவலகத்திற்கு பணிந்தனுப்பியுள்ளார்.

பெறப்பட்ட கருத்துரு ஆய்வு செய்யப்பட்டதில் இப்பணியாளர் பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்று 11.09.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

அன்னாரின் கல்விச் சான்றுகள் உண்மைத்தன்மை சான்று பெறப்பட்டுள்ளது. எனவே இப்பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் முதன்முதலில் பணியேற்ற நாளான 11.09.2020 முற்பகல் முதல் கீழ்க்கண்ட நிபந்தனையின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

இப்பணியாளர் பணியேற்ற நாள்முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைப்படுவார். தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சினையும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற வேண்டும்.

மேலும், இது குறித்தான பதிவுகள் சம்பந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்படல் வேண்டும். தனியரின் பணிப்பதிவேடு 1–திரள் இதனுடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் மறு அஞ்சலில் அனுப்ப சார்ந்த அலுவலருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு

முதன்மைக் கல்விஅலுவலர்
இராமநாதபுரம்

பெறுநர் – சம்பந்தப்பட்ட பணியாளர் (சார்ந்த அலுவலர் மூலமாக)

நகல் – முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், மஞ்சூர்,
இராமநாதபுரம் மாவட்டம்

அசல் பணிவரன்முறை ஆணை பெற்றுக் கொண்டேன்
இரா. சுமதி 5.1.2022